IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

S.C.No. 369 of 2023

Deposition of witness for

PW5 (LW10)

| | |
|---|---|
| Name | : Thiru. Suresh |
| Father's Name | : Mani |
| Age | : |
| Address | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of October 2025 .

23.10.2025

PW5 முதல் விசாரணை

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ராஜி ஆஜர்

நான் தற்பொழுது விழுப்புரம் மாவட்ட இயங்கும் தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 10.01.2023 அன்று சென்னை தடய அறிவியல் தலைமை அலுவலகத்தில் நஞ்சியல் பிரிவில் அறிவியல் அலுவலராக பணியில் இருந்த பொழுது வண்ணாரப்பேட்டை போக்குவரத்து புலனாய்வு காவல் நிலைய குற்ற எண்.6/2023 வழக்கில் சம்பந்தப்பட்ட இராஜி ஆண் வயது 54, என்பவருடைய ரத்தம் மாதிரி ரத்த சேகரிப்பு குழாயில் சேகரிக்கப்பட்டு மூடி முத்திரையிடப்பட்டது மருத்துவ அதிகாரி அவசர மருத்துவத்துறை அரசு ஸ்டான்லி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இருந்து தலைமை காவலர் எண். 21204, திரு. சதீஷ்குமார் என்பவர் மூலமாக எங்களுடைய ஆய்வகத்தில் பெறப்பட்டு துணை இயக்குனர்

முன்னிலையில் பகுப்பாய்வு செய்யப்பட்டது. அந்த ரத்தத்தில் 115 மில்லி கிராம் சதவீதத்தில் எத்தில் ஆல்கஹால் இருந்தது என்று கண்டறியப்பட்டு சான்று அளிக்கப்பட்டது. மேற்படி அறிக்கை எண் Tox/D/6/2023 dt: 11.01.2023 அனுப்பி வைத்தேன். என்னால் அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ–4 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கிறது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> -

உணவு மற்றும் மருந்து பொருட்களில் எத்தில் ஆல்கஹாலின் தன்மை சுமார் 20% தான் இருக்கும். இந்த அளவில் குறிப்பிடப்பட்ட அளவிற்கு இருக்காது என்று சாட்சி கூறுகின்றார். ரத்த மாதிரி 10.01.2023 அன்று எங்கள் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது மேற்படி இரத்த மாதிரி 07.01.2023 அன்று எடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் சரிதான். எங்களுடைய ஆய்வகத்தில் பெறப்பட்ட ரத்த மாதிரி ராஜி என்பவருடையது தான் என்று உறுதியாக சொல்ல முடியாது என்று சொன்னால் அது சரியல்ல. மருத்துவ அதிகாரி மேற்படி ரத்த மாதிரியை ராஜி என்பவரிடமிருந்து கைப்பற்றி மூடி முத்திரையிட்டு அனுப்பி வைத்திருப்பதால் அது ராஜியினுடையது தான் என்று சாட்சி சொல்லுகின்றார்.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

23.10.2025

III Addl. Sessions Judge.
III Addl. Court.